1981 பிப்ரவரி 5]

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, களவுபோன சிலை பம்பாயிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிகிறது. பம்பாயில் அந்தச் சிலை யாரிடத்தில் இருந்தது? அந்த பம்பாய் நபர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, எங்கே இருந்து மீட்கப்பட்டது என்கிற தகவல் இல்லை. அது சம்பந்தமாக 6 பேர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று இருக்கிறது. அதிலே இரண்டு பேர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 4 பேர்கள் மீது வழக்கு நடைபெற்று வருகிறது. அதிலே ஒருவர் தலைமறைவாக இருக்கிறார். இந்தத் தகவல்தான் இருக்கிறது. எந்த இடத்தில் இருந்து எந்த மாநிலத்தில் இருந்து மீட்கப்பட்டது என்ற தகவல் இல்லை.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அந்தக் களவு போன சிலை பின்னப்பட்டு அல்லது சேதப்பட்டு மீட்கப்பட்டதாக அறிகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டுள்ள தகவலில் இருந்து அப்படி பின்னப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை.

பூம்புகார் சுற்றுலா விடுதி

* வினா எண்.—187 திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பூம்புகாரில் கட்டப்பெற்றுள்ள தங்கும் விடுதிகள் பொது மக்கள் பயனுக்கு இன்னும் திறந்து விடாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் இருந்து அந்த நிலை இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) : பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி (Dormitory) சங்கு, சிப்பி வடிவ குடில்கள் முறையே 20—11—1976, 28—2—1980 முதல் திறந்து விடப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவை சுற்றுலாத் துறையின் பொறுப்பில் உள்ளன.

[1981 பிப்ரவரி 5

[முற்பகல் 9–30]

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள அந்த தங்கும் விடுதிகள் எப்போது, எந்த ஆண்டில் கட்டப்பட்டன? அவை ஏன் இவ்வளவு காலதாமதமான பிறகு திறந்து வைக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த அரசு முதலாவது பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலே—அதாவது 1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே அவை கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போல 1976 ஆம் ஆண்டு அந்த 'டார்மிட்டரி' துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு அங்கே எழுப்பப்பட்ட, சங்கு, சிப்பி வடிவத்தில் அமைக்கப்பட்ட குடில்களை ஒட்டி முறையாக தண்ணீர் வசதி, மற்ற பல வசதிகள், மழைக் காலத்தில் தண்ணீர் வந்து தேங்கினால் அதைப் போக்குவதற்கு போக்கிட வசதிகள் போன்ற வசதிகளைச் செய்து, அவைகள் எல்லாம் சீர்செய்யப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டு அதன் பிறகு பொதுமக்கள் வசதிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, கட்டப்பட்ட விடுதிகள் 4 ஆண்டுகள் ஆனபிறகு திறந்து வைக்கப்பட்டதாகவும், அங்கு பல வசதிகள் செய்யப்பட்ட பிறகு திறக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்கள். விடுதிகள் கட்டப்பட்டு 4 ஆண்டுகள் ஆனபிறகுதான் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடைக் காலத்தில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய, இப்படிப்பட்ட காலதாமதத்திற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, முன்னால் பொறுப்பிலே இருந்தவர்கள் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டு போயிருக்கிறார்கள். ஆகவே, யார்மீது இந்தக் குற்றத்தைச் சுமத்தி, அதற்கான நிதியை வசூல் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதன் பிறகு அந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள சங்கு, சிப்பி வடிவ குடில்கள் பொதுமக்கள் வசதிக்குப் பல நாட்களுக்குப் பின்னால்தான் திறந்துவிடப்பட்டதாகச் சொன்னார்கள். அங்கே போதிய வசதிகள் இல்லாத காரணத்தால், தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்றவை இல்லாத காரணத்தால் அவைகளைச் சரிவர செய்துகொடுக்க அரசு ஆராயுமா? சரியான முறையில் அவை பராமரிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? சரியான முறையில் பராமரித்து, போதிய வசதிகள் செய்துகொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : தலைவரவர்களே, இதை அமைத்தவர்கள் சங்கு போன்றும், சிப்பி போன்றும் நல்ல கலை நுணுக்கத்தோடு அமைக்க வேண்டுமென்ற விருப்பத்தில்

1981 பிப்ரவரி 5]

அமைத்ததால் அப்படிப்பட்ட விடுதிகள் தங்குவதற்கு ஏற்றவகையில் இருக்கிறதா என்று பரிசீலித்ததாகத் தெரியவில்லை. அதனால்தான் இதிலே பல சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. அதுவும் அமைக்கப்பட்ட இடங்கள் தாழ்வான இடங்களாக இருப்பதனால் தண்ணீர் தேங்குவது மட்டுமல்லாமல், குடிநீர் போன்ற இப்படிப்பட்ட வசதிகள் செய்ய முடியாத சூழ்நிலையும் இருந்ததால் பல சங்கடங்களுக்கிடையே அந்த குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு, பொதுமக்களுக்கு இப்போது வாடகைக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றன. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்ற குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அப்படி வந்தால் அதுவும் நிவர்த்திசெய்யப்பட அரசு முயற்சி செய்யும்.

பாரதி மணி மண்டபம்

*வினா எண் 188—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டையபுரம் பாரதி மணிமண்டபத்தை மேலும் அழகுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எட்டையபுரத்தில் உள்ள பாரதி மணி மண்டபத்தை அரசு எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, சுதந்திர வேட்கை பற்றியும், மறுமலர்ச்சி காணவும் பாட்டுத் துறையிலே எழுச்சிபெறச் செய்த சுப்பிரமணிய பாரதியாரின் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாடலின் அடிப்படையிலே கட்டப்பட்ட மணிமண்டபம் இது. இன்றைய தினம் இது சரியான முறையில் பராமரிக்கப்படாமல் ஏகப்பட்ட குப்பைக் கூளங்கள் சூழ்ந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? இதை அரசே பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ள முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, காலம் சென்ற அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் முயற்சியால் அந்த மண்டபம் கட்டப்பட்டு இப்போது அதை தனியார் குழு ஒன்று நிர்வகித்து வருகின்றது. அரசு அதை எடுத்துக்கொண்டால் அதைச் சிறப்பாக நிர்வகிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி அரசு அந்த மண்டபத்தை ஏற்றுக்கொண்டு நல்ல முறையிலே பராமரிக்கின்ற ஒரு திட்டம் பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.